இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 15-02-2025

# பிரேன் சிங் மட்டுமா பிழை செய்தார்?

**ஒரு முதலமைச்சர் எப்படி இருக்கக் கூடாது என்பதற்கு எடுத்துக்காட்டு மணிப்பூர் மாநிலத்தை ஆண்ட பா.ஜ.க. முதலமைச்சர் பிரேன் சிங். ஒரு மாநிலத்தையே நாசம் செய்துவிட்டு இரண்டு ஆண்டுகள் கழித்து தனது பதவியை விட்டு விலகி இருக்கிறார் அவர். இவரையே தொடர்ந்து ஆள விட்டதும், அனுமதித்ததும் பா.ஜ.க. தலைமையின் மாபெரும் தவறாகும். மணிப்பூர் மக்களைப் பற்றி அவர்களுக்கு ஒரு துளிகூட அக்கறை இல்லை என்பதன் அடையாளம்தான் பிரேன் சிங் இரண்டாண்டு காலம் முதலமைச்சராக இருக்க விட்டதும் ஆகும்.**

'சோசியல் இன்ஜினியரிங்' என்ற பெயரால் சமூகங்களுக்குள் மோதலை உருவாக்குவது பா.ஜ.க.வின் பாணியாகும். அதனைத்தான் பல மாநிலங்களில் செய்து வருகிறது பா.ஜ.க. மணிப்பூரிலும் அதனைத்தான் செய்தது.

மணிப்பூர் மாநிலத்தில் 53 சதவிகிதமாக உள்ள மைதேயி சமூகத்தினர் தங்களுக்கு பழங்குடியினத் தகுதி கோரி வருகிறார்கள். மாநில மக்கள் தொகையில் 40 சதவிகிதம் உள்ள நாகா, குக்கி பிரிவினர் இதற்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து வருகிறார்கள். மைதேயி - குக்கி ஆகிய இரண்டு பிரிவினரும் மாறுபட்ட மதத்தைச் சேர்ந்தவர்கள். அதனால் விரிசல் அதிகம் ஆக்கப்பட்டு விட்டது. மைதேயி பிரிவினர் இதுவரை ஓ.பி.சி. பிரிவில் உள்ளனர். அவர்களை பழங்குடி பட்டியலில் சேர்ந்தால் தங்களது வாய்ப்புகள் பறிபோகும் என குக்கி பிரிவினர் நினைக்கிறார்கள்.

2023 ஆம் ஆண்டு மார்ச் 27 ஆம் தேதி, எஸ்.டி. பட்டியலில் மைதேயி பிரிவைச் சேர்ப்பதற்கான பரிந்துரைகளை ஒன்றிய அரசுக்குச் சமர்ப்பிக்க மணிப்பூர் மாநில அரசுக்கு மணிப்பூர் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. இது குக்கி சமூகத்தவரை கோபம் கொள்ள வைத்தது. இதனை உணர்ந்து செயல்படவில்லை முதலமைச்சர் பிரேன் சிங். இப்படி ஒரு மோதல் ஏற்படும் என்பதை கணிக்கத் தவறினார் பிரேன் சிங். போராட்டக்காரர்களை அழைத்து தொடக்கத்தில் பேசாமல் அமைதி காத்தார் பிரேன் சிங். இவர் மைதேயி பிரிவினருக்கு ஆதரவு தெரிவிக்கிறார் என்று குக்கி இனத்தினர் நம்பினார்கள். அப்படித்தான் பிரேன் சிங் நடந்து கொண்டார்.

குக்கி இனத்தவர் நடத்திய பேரணியைக் குலைக்கும் காரியங்களை மைதேயிஇனத்தவர்செய்தார்கள். இதுபெரும்பான்மைமாவட்டங்களில் வன்முறையாக மாறியது. இந்த வன்முறைகள் அனைத்தையும் மணிப்பூர் காவல் துறை வேடிக்கை பார்த்தது. மணிப்பூரில் துப்பாக்கிகள் சர்வ சாதாரணமாகக் கிடைக்கும். மேலும், காவல் நிலையங்களில் புகுந்து போராட்டக்காரர்கள் துப்பாக்கிகளைத் தூக்கிச் சென்றார்கள். அதையும் பிரேன் சிங் அரசால் தடுக்க முடியவில்லை.

**இதன் உச்சமாக இரண்டு பெண்கள் ஆடை களையப்பட்டு நிர்வாணமாக அழைத்துச் செல்லப்படுவதும் - அதனை பெரும் கூட்டமானது வேடிக்கை பார்த்தபடி நடந்து செல்வதுமான காட்சிகள் வெளியானது.**

'தினத்தந்தி' நாளிதழ் பிரேன் சிங்கின் பேட்டியை தலைப்புச் செய்தியாக 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வெளியிட்டது. பெண்கள் நிர்வாணமாக இழுத்துச் செல்லப்பட்டது பற்றி அந்த நிருபர் கேட்டபோது, "இது போல நிறைய நடந்துள்ளதே" என்று பதற்றமே இல்லாமல் சொன்னவர்தான் பிரேன் சிங்.

2023 ஆம் ஆண்டு மே மாதம் 4 ஆம் தேதி இந்த கொடூரச் சம்பவம் நடந்தது. இந்த வீடியோ ஜூலை மாதம் வெளியானது. வெளியான பிறகு, ஜூலை 18 ஆம் தேதிதான் கொடூரத்துக்குக் காரணமான சிலரை கணக்குக் காட்டுவதற்காக கைது செய்தார் பிரேன் சிங். இதன் பிறகுதான் 'ஐயோ எவ்வளவு கொடூரம் நடந்து விட்டது' என்று இந்த நாட்டின் பிரதமர் மோடி பேட்டி அளித்தார்.

பேட்டி அளித்தாரே தவிர பிரதமர் மோடி, இந்த இரண்டு ஆண்டு காலத்தில் ஒரு முறை கூட மணிப்பூர் செல்லவில்லை. நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக்குக் கூட அவர் மணிப்பூர் போகவில்லை. உள்துறை அமைச்சர் அமித்ஷா ஒருமுறை போனார். அத்தோடு சரி.

ஆனால் மணிப்பூர் இந்த இரண்டு ஆண்டுகளும் எரிந்து கொண்டுதான் இருந்தது. ஐநூறுக்கும் மேற்பட்டவர்கள் இதுவரை கொல்லப்பட்டு இருக்கலாம். அமைதி என்பதே போய்விட்டது.

பிரேன் சிங் பதவி விலகிய பிப்ரவரி 9 ஆம் தேதியன்றுகூட மணிப்பூர் ரிசர்வ் படை முகாமில் இருந்து துப்பாக்கிகள் கொள்ளையடிக்கப்பட்டன. தௌபால் மாவட்டத்தில் இந்திய ரிசர்வ் படை முகாமுக்குள் ஆயுதங்களுடன் புகுந்த மர்ம கும்பல், அங்கிருந்த துப்பாக்கிகளையும் தோட்டாக்களையும் எடுத்துச் சென்றுள்ளது. 6 தானியங்கி துப்பாக்கிகள், 3 ஏகே ரக துப்பாக்கிகள், 270 தோட்டாக்கள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளது. இதுதான் கடந்த இரண்டு ஆண்டு மணிப்பூர் காட்சிகள் ஆகும். இதனை தடுக்கத் தவறியது பிரேன் சிங் மட்டுமல்ல, ஒன்றிய பா.ஜ.க. அரசும் இதற்குப் பொறுப்பேற்க வேண்டாமா?

**'மைதேயி குழுக்கள் மாநில அரசின் ஆயுதங்களைக் கொள்ளையடிக்க அனுமதிக்கப்பட்டார்கள்' என்ற பொருளில் பிரேன் சிங் பேசிய ஆடியோ ஒன்று சமீபத்தில் வெளியானது. இது தொடர்பாக விசாரித்தது உச்சநீதிமன்றம். 'இந்த ஒலிப்பதிவின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து சீலிடப்பட்ட உறையில் எழுதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுங்கள்' என்று மத்திய தடய அறிவியல் ஆய்வகத்துக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு போட்டுள்ளது. இதன்பிறகுதான் பிரேன் சிங் பதவி விலகி இருக்கிறார்.**

**2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பதவி விலகி இருக்க வேண்டிய பிரேன் சிங், 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பதவி விலகி இருக்கிறார். இவரை ஆள அனுமதித்தது பிரதமர் மோடியின் குற்றமல்லவா? உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் குற்றமல்லவா?**

●●



நீர்வளத் துறை மற்றும் இயற்கை வளங்கள் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் தமிழ்நாட்டில் கல் குவாரிகளுக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது குறித்தும் அதன் நீட்டிப்பு வழங்குவது குறித்து கல்குவாரி, கிரஷர் மற்றும் லாரி உரிமையாளர்கள் சங்க உறுப்பினர்களுடன் ஆலோசனைக் கூட்டம் 12.02.2025 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இயற்கை வளங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் தலைவர் மு.தீனபந்து, (ஓய்வு), புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையர் எ.சரவணவேல்ராஜ், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை இயக்குநர் ஆ.ர. ராகுல் நாத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தி.மு.க.வின் வாக்கு வங்கி அதிகமாக உள்ளது!

# 'திராவிட மாடல்' ஆட்சிக்கு மக்களிடையே ஆதரவு அலை வீசுகிறது!

## சென்னை – அண்ணா அறிவாலயத்தில் – அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

சென்னை, பிப். 15 -

"தி.மு.க. வின் வாக்கு வங்கிஅதிகமாகவுள்ளதுஎன்றும் 'திராவிட மாடல்' ஆட்சிக்குமக்களிடையேஆதரவு அலை வீசுகிறது" என்று நேற்று முன்தினம் அண்ணா அறிவாலயத்தில் அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையில் குறிப்பிட்டார்.

அமைச்சர் எஸ்.ரகுபதி அளித்த பேட்டி வருமாறு:-

முதலமைச்சரின் ஆட்சியில்மக்கள்நலத்திட்டங்கள் ஒவ்வொன்றும்எல்லாகுடும்பங்களையும்சென்றடைந்து இருக்கின்றது. பலன் அடையாத குடும்பமே இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு இன்றைய ஆட்சி நடைபெறுகிறது. இதனை அண்மையில் வெளிவந்துள்ள INDIA TODAY பத்திரிக்கையுடன் CVOTERS இணைந்து நடத்திய Mode of the nation என்கிற கருத்துக்கணிப்பும் உணர்த்து கின்றது.

கருத்துக்கணிப்புகளை நாங்கள் நம்புவது கிடையாது என்றாலும்கூட, அதற்கும் ஒரு வலிமை உண்டு எனப்பார்க்கவேண்டும். சமீபத்திலே INDIA TODAY பத்திரிக்கையுடன் CVOTERS இணைந்து Mode of the nation என்ற கருத்துக் கணிப்பை நடத்தியது. அந்த கருத்துக்கணிப்பிலே, இன்று நாடாளுமன்ற தேர்தல் நடந்தால்கூ 39தொகுதிகளில்திமுகதலைமையிலான கூட்டணிதான் வெல்லும் என்று கூறப்படுகின்றது. கடந்த நாடாளுமன்ற தேர்தலில் 47% வாக்குகளை வாங்கியிருந்த திமுக கூட்டணி 52% வாக்குகளை பெறும் என்றும்; அதிமுக 23%லிருந்து 20% ஆக குறையும், NDA கூட்டணி 21% எனவும் கருத்துக் கணிப்பில் கூறியிருக்கிறார்கள்.

முதலமைச்சரின் ஆட்சிக்கு proincumbency தான் இருக்கிறது,திராவிடமாடல் ஆட்சிக்கு ஆதரவு அலை தான்வீசுகிறது, Anti-incumbency என்கிற எதிர்ப்பு அலை கொஞ்சம்கூட இல்லை என்பதுஉறுதிபடத்தெரிகின்றது.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் மக்கள் மகிழ்ச்சி!**

திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் தமிழ்நாட்டு மக்கள் மகிழ்ச்சியோடுதான் இருக்கிறார்கள். ஆனால்



சிலர்எதாவதுசம்பவதைகுத்திக்காட்டி, அதை மிகைப்படுத்தி இந்த ஆட்சியை குறைகூறுகிறார்களே தவற, தமிழக மக்கள் இந்த ஆட்சியில் எதாவது திட்டத்தினால் பயன் அடைந்து மகிழ்ச்சியாகத்தான்இருக்கிறார்கள்.

இதற்கு முந்தைய ஆட்சியில் எந்த விதமான ஒரு பயனும் கிடைக்காத மாணவ, மாணவியர்கள் திராவிட மாடல் ஆட்சியில் பயன் அடைந்துவருகின்றனர். இதனால் இளைஞர்கள் அனைவரும்வரவேற்கும்ஆட்சியாகத் திராவிட மாடல் ஆட்சி விளங்குகின்றது.

அதை போல் விரைவிலேயேபட்டாவழங்ககூடிய நிகழ்ச்சிநடைபெறவுள்ளது. தமிழக மக்களின் மனநிலையைப் புரிந்துக்கொண்டு, அவர்களுக்குத்தேவையான அனைத்து வசதிகளையும் திராவிட மாடல் ஆட்சி செய்து வருகிறது.

**அ.தி.மு.க. கலகலத்துக் கொண்டிருக்கிறது!**

மறுபுறம் அதிமுக கலகலத்து கொண்டு இருக்கிறது என்பதை 23%லிருந்து 20% அவர்கள்வாக்குவங்கிசரிந்து இருப்பது எடுத்துக்காட்டுகிறது. எல்லா புதிய கட்சிகள், இருக்கிற கட்சிகள் எடுத்து பார்த்தாலும் NDA என 21%தான் வருகிறது. எங்களைப் பொறுத்தவரை 52% என்பதை இன்னும் உயர்த்த முதலமைச்சர்,துணைமுதலமைச்சர் பணிகளை மேற்கொள்வார்கள்.

நான் இரண்டு தினங்களுக்கு முன்பாக பேசும் போதே சொன்னேன், அதிமுக இபிஎஸ் ன் கட்டுப்பாட்டில் இல்லை. அதைஅங்கேஇருப்பவர்கள் பேசிகொள்வதிலேதெரிந்து கொள்ளலாம். முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தனது நண்பர்களுடன் பேசிக்கொண்டு இருக்கும் போது, கட்சி தலைவர் இபிஎஸ், வேலுமணி, தங்கமணியாக இருந்தாலும், எல்லோருமேஎனக்குஜூனியர்கள்தான்என்று சொன்னதாகத்தகவல்வந்திருக்கிறது.

இதிலிருந்து அவர் எந்த அளவிற்கு ஆதங்கத்தில் இருக்கிறார் என்பதையும், அங்கு இருக்கும் சீனியர்கள் எந்தளவிற்கு ஆதங்கத்தில் இருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அந்த கட்சி கலகலத்து கொண்டு இருக்கிறது என்பதற்கான எடுத்துக் காட்டு தான் ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தலிலே முதல் முறையாக இரட்டை இலைக்கு வாக்களித்து வந்தவர்கள் உதய சூரியனுக்கு வாக்களித்துஇருக்கிறார்கள் என்பது உணர்த்துகின்றது.

கண்ணுக்குதெரிந்தவரை எதிரிகளே இல்லை என்று ஜெயலலிதா அவர்கள்தான் சொன்னார்கள். நாங்கள்எதிரிகள்இல்லைஎன்றுசொல்லவில்லை. எதிரிகள் இருக்கிறார்கள். அவர்களுடைய வாக்குவங்கிகுறைந்துசென்று கொண்டுள்ளது என்றுதான் சொல்கிறோம்.

எதிர்கட்சிகள் அனைத்தும்வாக்குவங்கியைசேர்ந்து வந்தாலும், எங்கள் வாக்கு வங்கியை மிஞ்ச முடியாது. அதற்கு ஏற்றால் போல் மக்கள்விரும்பும்ஆட்சியைமுதலமைச்சர் நடத்தி கொண்டு இருக்கிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டியளித்தார்.

### நீலகிரி மாவட்டம், உதகை சட்டமன்றத் தொகுதியில், வளர்ச்சித்திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து

# பல்வேறு துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது!

நீலகிரி, பிப். 15 -

நீலகிரி மாவட்டம், உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலையில், உதகை சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்று வரும் அரசின் திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து, துறை சார்ந்த அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நேற்று முன்தினம் (13.02.2025) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் உதகை அரசு மருத்துவக்கல்லூரியில் நடைபெற்று வரும் கட்டுமான பணிகளின் தற்போதை நிலை குறித்தும், பொதுப்பணித்துறையின் சார்பில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகள் குறித்தும், நீர்வளத்துறையின் சார்பில் உதகை படகு இல்லம் தூர்வாரப்படும் பணிகளின் தற்போதைய நிலை குறித்தும், நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் உதகை லவ்டேல் மாற்றுப்பாதை திட்டப்பணிகளின் நிலை குறித்தும், உதகை கோத்தகிரி சாலைப்பணி, உதகை இத்தலார் சாலைப்பணி, மண் ஆணி பொருத்தும் பணி உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்தும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் நடைபெற்று வரும் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத்திட்டம், பாராளுமன்ற சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத்திட்டம், அண்ணா மறுமலர்ச்சித்திட்டம், 15வது நிதிக்குழு மானியத் திட்டம், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்தும், உதகை நகராட்சியின் சார்பில் உதகை மார்க்கெட் கட்டுமான பணிகளின் விவரங்கள் குறித்தும், கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் மூலம் நடைபெற்று வரும் பணிகள் குறித்தும், பேரூராட்சிகள் சார்பில் சிறப்பு பகுதி மேம்பாடு திட்டம், கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டம், பள்ளி கட்டடம் கட்டுமான பணிகள், தேசிய சுகாதார இயக்கம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மக்கள் பணிகள் குறித்தும், மகளிர் திட்டம் சார்பில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், மகளிர் சுயகுழுக்களுக்கு கடன் வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும், தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் தேசிய தோட்டக்கலை திட்டம், அங்கக வேளாண்மை, நுண்ணீர் பாசன திட்டம் உள்ளிட்ட திட்டங்கள் குறித்தும், தாட்கோ சார்பில் விடுதி கட்டுமான பணிகள் குறித்தும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை சார்பில் குடிநீர் தொட்டி மற்றும் சாலைப்பணிகள் குறித்தும், சுற்றுலாத்துறையின் சார்பில் உதகை படகு இல்லத்தில் நடைபெற்று வரும் கட்டுமான பணிகள் குறித்தும், கூட்டுறவுத்துறையின் சார்பில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட பயிர்க்கடன் குறித்தும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் கேட்டறிந்தார்.

இக்கூட்டத்தில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தெரிவித்ததாவது:

இன்றைய தினத்தில் உதகை சட்டமன்ற தொகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளின் முன்னேற்றம் மற்றும் தற்போதைய நிலை குறித்து ஆய்வுக்கூட்டம் மேற்கொள்ளப்பட்டது. பெரும்பாலான பணிகள் உரிய நேரத்தில் முடிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக கலைஞர் கனவு இல்லம் உள்ளிட்ட திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் அனைத்து பணிகளையும் விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும். நிர்வள ஆதாரத்துறையின் சார்பில் உதகை ஏரியில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளை விரைந்து முடிக்கவும், தூர்வாரும் போது கிடைக்கும் வண்டல் மண்ணினை விவசாயிகளுக்கு வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதா என்பதை ஆராய்ந்து, நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், மக்கள் பயனடையும் வகையில் அனைத்து அரசு திட்டங்களையும் உரிய காலத்திற்குள் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி.என்.எஸ்.நிஷா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், மாவட்ட வன அலுவலர் (நீலகிரி வனக்கோட்டம்) கௌதம், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், குன்னூர் சார் ஆட்சியர் செல்வி சங்கீதா, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி, உதகை வருவாய் கோட்டாட்சியர் சதீஷ்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம், உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலையில், உதகை சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்று வரும் அரசின் திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து, துறைச்சார்ந்த அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் நேற்று முன்தினம் (13.2.2025) நடைபெற்றது. உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி.என்.எஸ்.நிஷா , கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், மாவட்ட வன அலுவலர் (நீலகிரி வனக்கோட்டம்) கௌதம், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன் உட்பட பலர் உள்ளனர்.